# காவிரியின் கண்ணீர்






தமிழகன்

தமிழ்க்காவிரி வெளியீடு–1

# தமிழகத்தின் நீர்வளம்



பிற மாநிலங்களுடன் ஒப்பிடும் போது தமிழகத்தின் நீர்வளம் மிகவும் குறைவு. நாம் பெரும்பாலும் மழைநீரையே பாசனத்திற்கு நம்பியுள்ளோம். ஜூன் முதல் செப்டம்பர் வரை தென்மேற்குப் பருவக்காற்றும் அக்டோபர் முதல் டிசம்பர் வரை வடகிழக்குப் பருவக்காற்றும் தமிழகத்திற்கு மழையைத் தருகின்றது.

அண்டை மாநிலங்களில் இருந்து ஓடிவரும் ஆற்றுநீர் தமிழகத்தின் தேவைக்கு மிக இன்றியமையாததாய் உள்ளது. கேரளம், கர்நாடகம், ஆந்திரா ஆகிய மாநிலங்களில் இருந்து தமிழகத்திற்கு வரும் நீரை நாம் பாசனத்திற்காக பெருமளவில் நம்பியுள்ளோம்.

தமிழ்நாட்டின் மொத்த நீர்வளத்தில் 75 சதவீதம் பாசனத்திற்கும் 20 சதவீதம் தொழிற்சாலைகளுக்கும் 5 சதவீதம் குடிநீராகவும் பயன்படுத்தப்படுகிறது.

பரவலாகவும் தொடர்ச்சியாகவும் தமிழகத்தில் மழை பெய்வதில்லை. தொடர்ந்து பல ஆண்டுகள் மழை பொழியாது வறண்டு போய்விடுகிறது. இத்தகைய காலங்களில் பாசனவசதியின்றி பயிர்ச்செய்கை முழுமையாகப் பாதிக்கப்படுகிறது. குடிநீருக்கே மக்கள் அவதிப்பட வேண்டியுள்ளது. நகர்ப்புறங்களில் இருந்த குடிநீர்த்தட்டுப்பாடு இப்போது கிராமப்புறங்களுக்கும் வேகமாகப் பரவிவிட்டது. சுத்தமான நீர் கிடைக்காததால் சுகாதாரக் கேடுகளும் அதிகரித்துவிட்டன. வறட்சிக்காலங்களில் நிலத்தடி நீர் பெருமளவு உறிஞ்சியெடுக்கப்படுவதால், நிலத்தடி நீர்வளமும் மிகவும் குறைந்து அபாயகரமான நிலையை அடைந்துள்ளது.

**நபர் வாரி நீர்வளம்**

| | |
|---|---|
| கர்நாடகம் | 0.093 மி.க.அடி |
| கேரளம் | 0.10 |
| தமிழ்நாடு | 0.026 |
| இந்தியா | 0.09 |

**தமிழகத்தில் பெய்யும் மழைஅளவு**

| | |
|---|---|
| ஜனவரி –பிப்ரவரி | 40 மி.மீ |
| மார்ச் –மே | 40 மி.மீ |
| ஜூன் –செப்டம்பர் | 305 மி.மீ |
| அக்டோபர் –டிசம்பர் | 455 மி.மீ |
| மொத்தம் | 940. மி.மீ |

**மழை நாட்கள்**

கர்நாடக வடநிலப் பகுதியில் சராசரி மழை நாட்கள் 76. தமிழ்நாட்டிலோ இது 55 நாட்கள் மட்டுமே.

## ஏரிப்பாசனம்

தமிழ்நாட்டின் கிராமங்களுக்கு ஏரிகள் அழகூட்டுகின்றன. ஏரிகள் இல்லாத கிராமங்களே இல்லையென்று சொல்லலாம். பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக நீர்ப்பாசன முறைகளில் அனுபவம் உள்ள தமிழக மக்கள், கிராமங்கள் தோறும் ஏரிகளை அமைத்துப் பாசனத்திற்குப் பயன்படுத்தினர். அக்காலத்தில் ஏரிகளை அமைத்தும் திறம்பட பாசன முறைகளை நிர்வகித்தும் தமிழர்

தஞ்சையில காயுது நஞ்ச வயக்காடு
தவிச்சிபோயி கெடக்குது வெவசாயிங்க பாடு
கஞ்சிக்கு வழியில்லாம கலங்கிப் போச்சு மனசு
காலங்காலமாக இந்தக் கஸ்றாவி பொழப்பு

—தஞ்சை

ஏத்துல மாட்டக்கட்டி சேத்துல உழுது வச்சோம்
ஆத்துல தண்ணி இல்ல பாத்ததும் கலங்கி நின்னோம்
நாட்டுல உள்ளவங்க நாலுபேரு பெரியவங்க
கோட்டுல கேசுபோட போனாங்க காணவில்ல !

—தஞ்சை

தண்ணிய மறைச்சிகட்டி தமிழனத் தவிக்க வச்சான்
அந்நிய நாட்டுக்காரன் அநியாயம் பண்ணிப்புட்டான்
ஒட்டுக்கு வந்தவங்க ஒபதேசம் செஞ்சவங்க
கோட்டுல கேசுபோட போனாங்க காணவில்ல !

—தஞ்சை

வெவசாயி ஒன்னா சேந்தா வெவகாரம் தீர்ந்துவிடும்
காவிரி ஆத்துத் தண்ணி கரைபுரண்டு ஒடி வரும்
போராடப் புறப்படுவோம் ! புதுவாழ்வு அமைச்சிடுவோம் !
பொங்கி வரும் காவிரியில் பங்குபெற திரண்டிடுவோம் !

—தஞ்சை


காவிரி பாசனப்பகுதி
கர்நாடகம்
தமிழ்நாடு
கேரளம்